செய்தி வெளியீடு எண்–836 நாள்– 13.11.2009

**<u>தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி அதன் பணியாளர்களுக்கு தலா 1000 ரூபாய் ஊக்கத்தொகை!</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>**

1909ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் நூற்றாண்டு விழா மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நூற்றாண்டு விழாவையொட்டி, தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலும், அதன் சார்நிலை அலுவலகங்களான 6 மாவட்ட ஆவணக் காப்பகங்களிலும் பணிபுரியும் 220 பணியாளர்களுக்கு தலா 1000 ரூபாய் வீதம் மொத்தம் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (13.11.2009) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.